# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 295/மா/2023**
**நாள் : 12.12.2023**

திருமதி. S. திலகவதி,
சென்னை– 54. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி, H.V.F.எஸ்டேட், டைப்-II, எண்.16/6 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. திலகவதி அவர்களின் 15.09.2023 நாளிட்ட முறையீட்டு மனு 19.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 295/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, ஆவடி, H.V.F.எஸ்டேட், டைப்-II, எண்.16/6 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. திலகவதி அவர்களின் 15.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்:

"என் அம்மா சுந்தரி.S வயது 68, தனியாக கோவையில் வசித்து வருகிறார்கள். எங்கள் பரம்பரை சொத்தில் பாகம் பிரித்து 2004-ம் ஆண்டில் பதிவு செய்துவிட்டார்கள். சர்வே எண்.363, கோவை மேற்கு மண்டலம், வார்டு 41, மொத்தம் 7 ஓட்டு வீடுகள் இருந்தன. என் பெரியப்பா மகனுக்கு இரண்டு ஓட்டு வீடுகள் அதை 2015ல் இடித்து "2 சென்ட்" புதிய வீடு 9 அடி பாதையில் 4 மாடி வீடு கட்டியுள்ளார். பொதுப்பாதையை ஆக்கிரமித்து வீட்டைச் சுற்றி நான்கு புறமும் சுவர் கட்டியுள்ளார்.

எங்கள் கழிப்பிடம் செல்லும் 3 அடி வழி எங்கள் ஓட்டு வீட்டை ஒட்டி மாநகராட்சிக்கு வரிகட்டும் இடத்தையும் ஆக்கிரமித்து சுற்றிச்சுவர் கட்டியுள்ளார். பொதுப்பாதை அதிகமாக மேடு ஏற்றி, படிகட்டு, கேட், 4 மாடி கட்டி, சாக்கடையை பொதுப் பாதையில் ஓட்டு வீட்டின் அருகில் விடுவதால் எங்கள் வீட்டிற்குள் கழிவுநீர் வருகிறது. இது குறித்து கேட்டால், கடப்பாறையில் அடிக்க வருகிறார். எங்களுக்கு உதவ யாரும் இல்லை.

மாநகராட்சியில் எப்படி 9 அடி பாதையில் 4 மாடி கட்ட அனுமதி கொடுத்தது ? அதில் 6 வீடுகள் உள்ளன. 4 மாடி வீடு சேதாரம் அடைந்தால் அருகில் உள்ள எங்கள் ஓட்டு வீட்டின் மேல்தான் விழும். அங்கு உள்ளவர்கள் நிலைமை என்ன ? எந்த கட்டிட விதிமுறைகளும் பின்பற்றவில்லை.

கோவை மாநகராட்சிக்கு என் அம்மா வரிகட்டும் இடத்தையும் சேர்த்து எப்படி வீடுகட்ட மாநகராட்சி Approval (அனுமதி) கொடுத்தது. மாநகராட்சியில் புகார்பெட்டி, பதிவு தபால், ஆட்சியர், மேயர், C.M.Cell ஆகியவற்றல் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

C.M.Cell கடந்த இரண்டு ஆண்டுகளாக புகார் மனு அனுப்பி வருகிறேன். அதிகாரி வந்து பார்த்துவிட்டு ஆக்கிரமிப்பு உள்ளது என்றும் அது அகற்றப்படும் என்று மட்டும் கடிதம் கொடுத்தனர். அந்த கடிதமும், நான் என் மனுவில் எந்த இடத்திலும் கதவு எண்.24, 25 என்று குறிப்பிடவில்லை. ஆனால் 24, 25 என்று எதிராளிக்கே கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது.

மறுபடியும் ஆட்சியரிடம் புகார் மனு 15.5.2023 அன்று கொடுத்தேன். அதிகாரிகள் ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு உள்ளது. 1.6.2023க்குள் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று மாநகராட்சியால் அறிவிப்பு (Notice) கடிதம் வழங்கியும் இன்னும் எடுக்கவில்லை.

மறுபடியும் C.M.Cell-க்கு கடிதம் போட்டும் (ஜூன் மாதம்) அதற்கு மே மாதம் மேயர் கடிதத்தை வைத்து மனுவை மூடிவிட்டனர். மறுபடியும் 1100க்கு புகார் கொடுத்தபின் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டது. எப்பொழுது அகற்றப்படும் என்று தேதி குறிப்பிடாமல் கடிதம் C.M.Cellக்கு வந்தது. ஆனால் இன்று (14.9.2023) வரை புகார் கொடுத்து வருகிறேன். எந்த நடவடிக்கையும் மாநகராட்சி எடுக்கவில்லை. என் அம்மா 68 வயதிலும், வாரம் வாரம் ஆட்சியர், மேயர் என்று மாறி மாறி 4,5 முறை புகார் கடிதம் இருவருக்கும் கொடுத்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. கடிதத்திற்கு எந்த பதிலும் இல்லை. வார்டு கவுன்சிலரிடமும் ஏன் இன்னும் மாநகராட்சியில் பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்றால், 60 வருட பழமையான பாதையை இன்னும் மாநகராட்சிக்கு கொடுக்கவில்லை என்கிறார்.

மேலும் அந்த பாதையில்தான் நல்ல தண்ணீர் குழாய், உப்பு தண்ணீர் பதியப்பட்டு உள்ளது. மாநகராட்சியால் தற்போது பாதாளச் சாக்கடையும் அந்த பொதுப் பாதையில் போடப்பட்டு உள்ளது. சாலையும் பிரபாகரன் வீட்டிற்கு மேடு ஆகவும் போட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

நான் ஏன் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்று தொலைபேசியில் கவுன்சிலரிடம் கேட்டால் பாதாள சாக்கடை போட்டு சாலை போடாமல் உள்ளனர். ஏன் என்றால் தண்ணீர், சாக்கடை அடிப்படை தேவை என்கிறார். ஏன் சாலை அடிப்படை தேவை இல்லையா ? சாலை ஆக்கிரமிப்பை அகற்ற மாநகராட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியானால் தனியார்க்கு சொந்தமான சாலையில் மக்கள் வரி பணத்தில் பல லட்சம் செலவு செய்து தனி நபருக்கு ஏன் மாநகராட்சி செய்ய வேண்டும்.

1. 9 அடி பாதையில் அடுத்தவர் வரிகட்டும் இடத்திற்கும், கழிப்பிடம் செல்லும் சாலை, பொதுப் பாதை ஆக்கிரமிப்பு ஆகி எல்லாவற்றிற்கும் மாநகராட்சி எப்படி Approval கொடுத்து வீடு கட்டச் சொன்னது.
2. 4.8 மீட்டர் சாலை இருந்தால் மட்டுமே மாநகராட்சி வீட்டு மனைக்கு வீடுகட்ட அனுமதி (Approval) தர வேண்டும் என்பது விதி. ஆனால் 9 அடி பாதையில் 4 மாடி வீடு கட்டப்பட்டு உள்ளது. அருகில் ஓட்டு வீடுகள் உள்ளது. வீடு சேதாரம் அடைந்தால் ஓட்டு வீட்டின் மீது தான் விழும் அங்கு வாழும் மக்களின் நிலை என்ன ?
3. 60 வருட பொதுப் பாதையை மாநகராட்சி சாலை இல்லை என்றால் எப்படி, மாநகராட்சி பல லட்சம் செலவு செய்து பாதாள சாக்கடை யாருக்கு ஒரு தனி மனிதனுக்கு எப்படி போட்டது ?

4. 2015ல் இடித்த ஓட்டு வீட்டிற்கு 108ரூ வரி 2022 வரை கட்டப்பட்டு உள்ளது. எப்படி 4 மாடி வீட்டில் ஓட்டு வீடு வந்தது ?
5. என் அம்மா அருகிலுள்ள ஓட்டு வீட்டிற்கு ரூ.295/- கட்டுகிறார். 4 மாடி வீட்டிற்கு ரூ.108/- வரி பழைய எண் எப்படி புதிய வீட்டிற்கு வந்தது.

ஆனந்தி திருமணமே 2012 தான். ஆனால் Ground Floor 2002ல் கட்டப்பட்டது என்று உள்ளது எப்படி ?

இரண்டு ஓட்டு வீடு (24,25) 2015லேயே இடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இன்னும் எண்.24 ஓட்டு வீட்டிற்கு எதற்கு வரி (ரூ.108) கட்ட வேண்டும். எனக்கு புரியவில்லை. வரி ஏய்ப்பு நடந்ததா ?

6. அவர் பத்திரத்தில் உள்ள இடத்திற்கு தானே மாநகராட்சி வீடு கட்ட அனுமதி தரனும்.

ஆனால் என் அம்மா வரி கட்டும் இடத்தை எங்கள் பத்திரத்தில் உள்ள இடத்தை எப்படி மாநகராட்சி பிரபாகரனுக்கு வீடு கட்ட Approval கொடுக்க முடியும் ? ஆனால் Approval மாநகராட்சியால் கொடுக்கப்பட்டு உள்ளது.

7. ஆட்சியர், மேயர், C.M.Cell கடிதத்திற்கு கோவை மேற்கு மண்டல மாநகராட்சியில் எந்த மரியாதையும் இல்லை. பிரபாகரன் ஒருவருக்கு மட்டுமே சட்ட விரோதமாக அனைத்து செயல்களும் செய்கிறது.

8. கோவை மேற்கு ஆணையர் பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்ற Notice (அறிவிப்பு கடிதம்) 1.6.2023க்குள் மூன்று நாட்களுக்குள் எடுக்க உத்தரவு போட்டும், மூன்று மாதத்திற்குமேல் ஆகியும் எந்த நடவடிக்கையும் இல்லை ? ஏன் ஐயா ?

மாநகராட்சியில் கேட்டால் அதிகாரிகள் நாங்கள் வீட்டிற்கு Approval கொடுக்கவில்லை என்பார்கள். அப்படி என்றால் Approval தராமல் வீடு சட்ட விரோதமாக கட்டப்பட்டு உள்ளதா ?

வீட்டு வரி ஒரு மாதிரியாக உள்ளது வீடு ஒரு மாதிரியாக உள்ளது. இரண்டிற்கும் என்ன சம்மந்தம் ? பொதுப்பாதை ஆக்கிரமிப்பை மாநகராட்சி ஆணையர் கடிதம் கொடுத்தும் ஏன் அகற்றவில்லை ? மாநகராட்சி அதிகாரிகளால் வீட்டுவரி ரசீது Computer-ல் மறைக்க, மாற்ற அதிக வாய்ப்பு உள்ளது. இரண்டு வருடம் எனக்கு தெரிந்து இப்படிதான் செய்கிறது மாநகராட்சி. ஐயா, எங்கள் கழிப்பிட பாதையையும், பொதுப்பாதையையும் மீட்டுத் தாருங்கள். கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நாங்கள் வரி கட்டும் இடத்தை பிரபாகரன் அனுபவித்து வருகிறார். சாதாரண பொருள் திருடினால் சிறை தண்டனை உண்டு. ஆனால் தெரிந்தே அடுத்தவர் நிலத்தை, பொதுப்பாதை ஆக்கிரமித்து உள்ளார் மற்றும் வரி ஏய்ப்பு செய்தது போல் தோன்றுகிறது என்ன தண்டனை. பிரபாகரன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகளால் கடந்த இரண்டு வருடங்கள் தீராத மன உளைச்சலாக உள்ளது. என் அம்மாவுக்கும் இதை நினைத்து நினைத்து உடம்பு சரியில்லை. அவர் இந்த வயதிலும் ஆட்சியர், மேயர் என்று புகார் மனு கொடுத்த வருகிறார். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மன உளைச்சலுக்கும், நான்கு வருடத்திற்கும் மேலாக வீடு கட்டுவதில் இருந்து நாங்கள் வரி கட்டும் இடத்தை ஆக்கிரமித்தால் அதற்கு நஷ்ட ஈடு மாநகராட்சியிடமும், பிரபாகரனிடமும் இருந்து எங்களுக்கு வாங்கி தாருங்கள். மாநகராட்சி அதிகாரிகளை கடுமையாக தண்டிக்கவும், அப்பொழுது தான் திரும்ப திரும்ப இதுபோன்ற பொதுப்பாதை ஆக்கிரமிப்பு செய்ய அனுமதிக்கமாட்டார்கள். ஐயா, எங்கள் கழிப்பிடம் செல்லும் சாலையையும், பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றி எங்களுக்கும், பொது மக்களுக்கும் உதவவும். மிகவும் உதவியாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 27.09.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 30.10.2023 நாளிட்ட அறிக்கையில்:**

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.41க்குட்பட்ட பி.என். புதூர், விவேகானந்தர் வீதியில் கிழக்கு மேற்காக உள்ள பொதுப்பாதை என, அருகில் குடியிருப்போர்களின் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குறுகிய மண்பாதையை ஆக்கிரமித்து தனது சகோதரர் திரு. பிரபாகரன் வீடு கட்டியுள்ளதை அகற்றி தருமாறு கோரியுள்ளார். இந்த பாதை தனியார் பாதையாக உள்ளது. மாநகராட்சிக்கு சொந்தமில்லாத தனியார் பாதையில் உள்ள ஆக்கிரமிப்பிற்கு மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்க இயலாது என்ற பதிலினை மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அவர்களது பூமியில் பாகபிரிவினை செய்த அளவீடுகளை உரிய தொகை செலுத்தி நகர அளவையர் மூலம் விபரம் பெற்றுக்கொள்ள நகர அளவையர் அவர்கள் 5.9.2023-ம் தேதிய குறிப்பின்படி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 02.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 27.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 02.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

> "கோயம்பத்தூர் மாநகராட்சி வார்டு எண் 41 சர்வே எண் 373ல் உள்ள எங்களது சொத்து எனது பெரியப்பா மகன் உட்பட 3 பேருக்கு பாகம் பிரிக்கப்பட்டது. இதில் மேற்கண்ட எனது பெரியப்பா மகன் பாதையை ஆக்கிரமித்து 3 மாடி வீடு கட்டியுள்ளார். மேற்கண்ட வீடு அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது. மேலும் அவரது வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் போடாமல், 3 அடி அகலமுள்ள பொதுப்பாதை இடத்தையும் ஆக்கிரமித்து 4 பக்கமும் சுவரை கட்டியுள்ளார். இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர், மாவட்ட ஆட்சியர் மற்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு புகார் மனு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து அங்கு ஆக்கிரமிப்பு உள்ளது என தெரிவித்து சென்றனர். அதன் பின்னர் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்திற்கு எவ்வாறு மாநகராட்சி வரி போடப்பட்டது என்கின்ற விவரம் தெரியவில்லை. மேலும், மேற்கண்ட 3 மாடி கட்டடம் கட்டியுள்ள பிரபாகரன் என்பவருக்கு எங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை விட மிகக் குறைவாக விதிக்கப்பட்டுள்ளது. எங்களது வீட்டிற்கு அருகில் உள்ள பொதுப்பாதையில், பாதாள சாக்கடை அமைத்தும், குடிநீர் பைப் லைன் போடப்பட்டுள்ளது.
>
> எனவே மேற்கண்ட திரு. பிரபாகரன் என்பவரின் அனுமதியில்லா கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், எங்களது இடத்தை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டதை அகற்றிடவும், பொதுப்பாதையில் அமைத்துள்ள பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் பைப் லைன் ஆகியவற்றை அகற்றவும், மேலும் எங்களது வீட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள வரியைவிட மேற்கண்ட திரு. பிரபாகரன் என்பவரின் வீட்டிற்கு குறைவாக வரி விதிக்கப்பட்டதன் மீதான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.
>
> இந்நேர்வு தொடர்பான வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரங்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி நகர அலுவலர் அவர்கள் 2.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

கோயம்பத்தூர் மாநகராட்சி வார்டு எண் 41, சர்வே எண் 373 பி.என் புதூர், விவேகானந்தர் வீதியில் பொதுப்பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து அளித்துள்ள புகார் மனுவையொட்டி மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு தனியார் பாதையில் உள்ளதால், மேற்கண்ட மனுதாரர் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பை மாநகராட்சியால் அகற்ற இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. பிரபாகரன் என்பவரின் 3 மாடி கட்டடத்திற்கு அனுமதி பெறப்படவில்லை. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களது இடத்தில் பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு போடப்பட்டுள்ளதா என்கின்ற விவரமும், மேலும் மனுதாரரின் வீட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள வரி குறித்த விவரமும் எனக்கு தெரியவில்லை என்பதால் மேற்கண்ட இடத்தில் என்னால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு கீழ்கண்ட விவரங்களை இன்னும் 3 நாட்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்:

1) மேற்கண்ட தெருவின் பொதுப்பாதையில் குடிநீர் இணைப்பு குறித்த விவரம்.
2) மேற்கண்ட தெருவின் பொதுப்பாதையில் பாதாள சாக்கடை இணைப்பு குறித்த விவரம்.
3) மனுதாரருக்கும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள திரு. பிரபாகரன் என்பவரின் வீட்டிற்கும் விதிக்கப்பட்டுள்ள சொத்து வரி குறித்த விவரம்.
4) கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரங்கள்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக கோயம்பத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர் அளித்துள்ள 30.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

மனுதாரர் கோயம்புத்தூரில் வார்டு எண்.41, சர்வே எண்.373ல் உள்ள சொத்து தன்னுடைய பெரியப்பா மகன் உட்பட 3 பேருக்கு பாகம் பிரிக்கப்பட்டதாகவும், பெரிப்பா மகன் பாகம் பிரிக்கப்பட்ட இடத்தில் கோபம்புத்தூர் மாநாகராட்சியின் அனுமதியில்லாமல் மூன்று மாடி கொண்ட வீட்டை கட்டியுள்ளார் எனவும், மற்றும் பொதுப்பாதை இடத்தையும் ஆக்கிரமித்து நான்கு பக்கமும் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதாகவும், தங்களுடைய வீட்டிற்கு விதித்துள்ள வரியினை விட பெரியப்பா மகன் கட்டியுள்ள வீட்டிற்கு வரி குறைவாக விதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பெரியப்பா மகன் ஆக்கிரமித்துள்ள இடத்தினை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது என்றும், கோயம்புத்தூர் மாநகராட்சியின் இடம் ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்றும், மனுதாரர் குறிப்பிட்ட பொதுப்பாதை தனியார் பாதையில் உள்ளதால் அதில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற இயலாது என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு.பிரபாகரன் கட்டியுள்ள மூன்று மாடி கட்டடத்திற்கு அனுமதி பெறவில்லை என்றும், மனுதாரர் குறிப்பிட்ட பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் வரி விதிப்பு குறித்த விவரம் தனக்கு தெரியவில்லை என்பதால் மேற்படி இடத்தை ஆய்வு மேற்கொண்டு மூன்று நாட்களில்

(1) மேற்கண்ட தெருவின் பொதுப்பாதையில் குடிநீர் இணைப்பு குறித்த விவரம் (2) மேற்கண்ட தெருவின் பொதுப்பாதையில் பாதாள சாக்கடை இணைப்பு குறித்த விவரம் (3) மனுதாரருக்கும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட திரு. பிரபாகரன் என்பவரின் வீட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள சொத்து வரி குறித்த விவரம் மற்றும் (4) கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரங்கள் ஆகியவை குறித்து இம்முறைமன்றத்தில் சமர்ப்பிப்பதாக கோயம்புத்தூர் மாநகராட்சியின் உதவி நகர அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாகபிரிவினை சொத்து குறித்து உரிய தொகை செலுத்தி நகர அளவையர் மூலம் அளவீடு விவரங்களை பெற்றுக்கொள்ளும்படி மனுதாரருக்கு 5.9.2023 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கோயம்புத்தூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் உதவி நகர அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி அறிக்கையை மூன்று நாட்களில் இம்முறைமன்றத்திற்கு அனுப்பாமல் இருந்தது அவரது அலட்சியப் போக்கினை காட்டுகிறது. இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். கோயம்புத்தூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் தன்னுடைய 21.11.2023 நாளிட்ட அறிக்கையில் ;

(1) மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலை மாநகராட்சி வசம் ஒப்படைக்கவில்லை.

(2) மேற்கண்ட சாலை மாநகராட்சியின் பெயரில் இல்லை. ஆனால் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

(3) மேற்படி தெருவில் தெருவிளக்குகள், தண்ணீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) ஓட்டு வீட்டிற்கு ரூ.215/-, ரூ.351/- என குறைவாகவும், அருகாமையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு தரைதளம் ரூ.1241/- முதல் தளம் ரூ.1587/- இரண்டாம் தளம் ரூ.1521/- என வரிவதிப்பு செய்யப்பட்டுள்ளது.

(5) மேற்படி எதிர்மனுதாரர் கட்டிடத்திற்கு தரைதளம் மற்றும் முதல் தளம் மாநகராட்சியில் அனுமதி பெறப்பட்டுள்ளது. இரண்டாம் தளம் அனுமதியற்ற கட்டிடத்திற்கு உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்."

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், அச்சாலை மாநகராட்சியின் பெயரில் இல்லை என்று தெரிவித்துள்ள நிலையில், அச்சாலையில் தெருவிளக்குகள், தண்ணீர் குழாய் இணைப்பு ஆகியவை பொதுமக்களின் அடிப்படை தேவையை கருத்தில் கொண்டு மாநகராட்சியால் அளிக்கப்பட்டது என்பதாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் மாநகராட்சியின் வசம் இல்லாத தனியார் பாதையில் எவ்வாறு பாதாள சாக்கடை அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கையில் விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. இது தனிப்பட்ட நபருக்கு ஆதாயம் அளிக்கக்கூடிய வகையில் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்கள் செயல்பட்டுள்ளதாக இம்முறைமன்றம் தன்னுடைய சந்தேகத்தை பதிவு செய்கிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு.பிரபாகரன் கட்டியுள்ள மூன்று மாடி கட்டிடத்திற்கு தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றிக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என்று உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர் கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்படி புகாரினை தெரிவித்துள்ள நிலையில், அனுமதியின்றி திரு.பிரபாகரனால் இரண்டாம் தளம் கட்டப்பட்டபோது கோயம்புத்தூர் மாநகராட்சி கள அலுவலர்கள் மனுதாரரின் புகார் மனு மீது கள ஆய்வினை மேற்கொள்ளவில்லை என்பது புலனாகிறது. இது, சம்மந்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல அலுவலர்களின் மெத்தனப்போக்கே காரணம் என்றும் உள்நோக்கம் உள்ளதாக இருக்கிறது என்றும் இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் இரண்டாம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்ட

கட்டிடத்தின் உரிமையாளருக்கு Town and Country Planning Act, 1971ன் பிரிவுகளின்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து சரியான விளக்கம் கோயம்புத்தூர் மாநகராட்சியின் உதவி ஆணையரின் அறிக்கையில் விவரம் எதும் தெரிவிக்கப்படவில்லை.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு: 12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 41, பி.என்.புதூர் விவேகானந்தர் வீதியில் கிழக்கு மேற்காக உள்ள பொதுப்பாதை கோயம்புத்தூர் மாநகராட்சியின் வசம் ஒப்படைக்கப்படாத நிலையில் பாதாள சாக்கடை, குடிநீர் குழாய் இணைப்பு, தெரு விளக்குகள் எவ்வாறு அமைக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கையையும், அனுமதியின்றி இரண்டாம் தளம் கட்டும்வரை எவ்வித கள ஆய்வும் செய்யாமல், உரிய நடவடிக்கை எடுக்காத கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 30 தினங்களுக்கு அறிக்கை அனுப்பிவைக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

There is ample evidence to conclude that the field level officials of the Corporation upto the Assistant Commissioner have clearly defaulted in the following:-

(1) Clear Collusion and complicity with Thiru Prabakaran the building plan violator who has even added floors in construction of the approved plan for a substantial time in-spite of complaints.

(2) That when the lands that have not been handed over to the Corporation but have been developed with drainage, street lighting and drinking water supply by the officials concerned confirm the Forums' suspicion against the field level delinquents who have been hand-in-glove with the law breakers.

The Town and Country Planning Act has not been invoked by the Corporation in this particular case of violation by one Thiru Prabakaran. This speaks volumes about the field officials' integrity, reliability, connivance, disloyalty to the Local Body.

The Corporation Commissioner of Coimbatore is directed to view the observations of the Forum seriously and initiate steps as instructed. Unless strict disciplinary action is launched, the delinquency, default and dilly-dallying nature of the field level officials in favour of law breaking citizens will not abate. The DMA is instructed to sit tight over the Coimbatore Corporation in the issue and ensure that the Corporation fulfills its obligations to the area people sincerely above board in a dynamic manner.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. S. திலகவதி,
டைப் -II, எண்.16/6, HVF எஸ்டேட்,
ஆவடி, சென்னை – 600 054.

2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
பெரிய கடை வீதி, டவுன் ஹால்,
கோயம்புத்தூர் - 641 001.

3) உதவி ஆணையர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்